"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்". தாபிதம்: 1876

சத்தியவேத
பாது.
# காவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். ‖ யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆடிமீ 11-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 ‖ 27-ம் இல.

## காலி மேற்றிராணியார் மகாவந். லௌடாடியோ ஆண்டகையவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்



சென்ற 30 வருடகாலமாகக் காலி மேற்றிராணியாராகப் பெருமதிப்புடன் கடமையாற்றிவந்த மகாவந்தனைக்குரியலௌடாடியோ ஆண்டகையவர்கள் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளுவாரெனவும், புதிய மேற்றிராணியாரின் நியமனம் வரையும் அவர் அப்பிரிவின் பரிபாலகராக அம்மேற்றிராணியாருக்குள்ள சகல உரிமைகளுடனும் கடமையாற்றிவருவார் எனவும் உத்தியோகபூர்வமான செய்தி கிடைக்கப்பெற்றிருக்கின்றது. ஆண்டகையவர்கள் 1934-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30-ம் திகதி காலிமேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டவர். இவரே இம்மேற்றிராசனத்தின் 2-வது மேற்றிராணியாராவர். இற்றைக்கு 5 வருடங்களுக்குமுன் தமது மேற்றிராணித்துவ வெள்ளியூபிலி விழாவைக் கண்டுகளித்தார். இலங்கை மேற்றிராணிமாரில் தமது மேற்றிராணித்துவ வெள்ளியூபிலிவிழாவைக்கண்டுகளித்த ஐவரில் இவரும் ஒருவர். லௌடாடியோ ஆண்டகையவர்கள் வருங்காலத்தில் ஆலமிலியாறியா மேற்றிராணியார் என்னும் மடகுநாமத்துடன் விளங்குவார்.

## பம்பாய் சற்பிரசாத மகாநாட்டில் அபிஷேகங்கள் பல இடம்பெறும்

இவ்வருடம் கார்த்திகைமாதக் கடைசியில் பம்பாய்நகரில் நடைபெறவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டில் நடக்கஇருக்கும் நிகழ்ச்சிகளில் பல குருப்பட்டாபிஷேகங்களும் இடம்பெற இருக்கின்றன. இந்தியாவுக்குச் சேர்ந்த பல மேற்றிராசனங்களிலும் தொண்டாற்ற இருக்கும் குருப்பதவி அபேட்சகர்கள்பலர் அங்கு அபிஷேகம் செய்யப்படுவர். அத்துடன் ஐந்து பெருங் கண்டங்களில் மேற்றிராணிமாராக நியமிக்கப்பட இருக்கும் சில குருமார் இங்கு மேற்றிராணித்துவ அபிஷேகம் பெற்றுக்கொள்வர். இவ்வைபவம் கத்தோலிக்க சமயத்தின் சர்வதேச தன்மையைக் குறிக்கும். உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 20 கர்தினல்மார் விஜயம்செய்வார்களென்று எதிர்பார்க்கப் படுகின்றது. அவர்களுள் போலாந்துதேச கர்தினல் விசின்ஸ்கி ஆண்டகையும் ஒருவர். இம்மகாநாட்டின் ஞாபகார்த்தமாக இந்திய அரசாங்கம் 20விதமான தபால் முத்திரைகளை அச்சிட்டு வெளியிட இருக்கின்றது.

## தனித்தியங்கும் பள்ளிக்கூடங்கள் அவசியம்

சென்றவாரம் காலி அர்ச். அலோசியஸ் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் உரை நிகழ்த்திய பாப்பானவரின் ஸ்தானுபதியாகிய மகாவந், ஜேம்ஸ் நொக்ஸ் ஆண்டகையவர்கள் சனநாயக நாடுகளில் தனித்தியங்கும் பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டிய தன் காரணத்தை விளக்கிக்காட்டினார். "வெவ்வேறு ஜனநாயக நாடுகளில் வெவ்வேறு விதமான தனித்தியங்கும் பள்ளிக்கூடங்கள் இருப்பதை நாம் காண்கிறோம்" என்றார் ஆண்டகையவர்கள். பள்ளிக்கூட அதிபர் வண. போல் கஸ்பேர்ஸ் சுவாமியார் தமது அறிக்கையில் தனித்தியங்கும் பள்ளிக்கூடங்களுக்கு அநீதியானதடைகள்விதியாது தாராள மனப்பான்மையுடன் இனிமேலாவது அரசாங்கம் நடந்து கொள்ளக்கூடாதா? என்று பரிந்து கேட்டுக்கொண்டார்.

## கெனடி குடும்பத்தினர்

ஐக்கிய அமெரிக்கநாட்டு 'அற்றோர்னி ஜெனறல்' பதவியிலிருக்கின்ற திரு. றொபெட் கெனடியின் மனைவியார் எதெல் அம்மையாரும், அவரது பிள்ளைகளில் மூவரும் பாப்பரசரைச் சென்றவாரம் பேட்டிகண்டனர். அவ்வமையம் பாப்பரசர் எதெல் அம்மையாருக்குஅன்பளிப்பாகச் சுவிசேஷத்தில் கூறப்பட்ட நிகழ்ச்சிகளின் படங்கள் தீட்டப்பட்ட ஓர் அழகிய தட்டத்தையும், பிள்ளைகளுக்குத் தமது பலஸ்தீனா யாத்திரையின் சின்னமாக அச்சிடப்பட்ட தபால் முத்திரைச் சுருள்களையும் கொடுத்தருளினார்.

## இந்திய கத்தோலிக்கருக்குப் புதிய பிரதமரின் உறுதிமொழிகள்

புதிய இந்தியபிரதமர் ஸ்ரீ பகதூர்லால்சாஸ்திரிஅவர்கள் பதவி ஏற்றபின் அகிலஇந்திய கத்தோலிக்கர் தங்கள்சங்கத்தலைவர் திரு. ஏ. சுவாறிஸ்அவர்கள் மூலமாகத் தங்களது ஆழ்ந்த அன்பையும், ஒத்துழைப்பையும் புதியபிரதமருக்குத் தெரிவித்து, தேவனிடத்தில் அவருக்காகவும், நாட்டுக்காகவும் மன்றாடிவர உறுதிகூறியிருக்கின்றனர். மேலும், சிறுபான்மையினரைப்பற்றிப் புதிய பிரதமர் பகிரங்கமாகப் பாராளுமன்றத்தில்கொடுத்தஉறுதிமொழிக்காகவும் கத்தோலிக்கரின் விசேஷ நன்றியைத் தெரிவித்தார் திரு. சுவாறிஸ்.

புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டபின் இந்தியபாராளுமன்றத்தில் உரைநிகழ்த்திய திரு. சாஸ்திரிஅவர்கள் தமது உரையில், "சிறுபான்மையினரைப் பாதுகாத்துப் பெரும்பான்மையினராகிய இந்துக்களுக்குரிய சகல அரசியல் உரிமைகளிலும் சமபங்கு அளிப்பது எமது நாட்டின் கொள்கையாகும். இதைக் கடைப்பிடித்து நடப்பதில் நான் கண்ணும் கருத்துமாக இருப்பேன்"என்றார்.

இவ்விதம் சிறுபான்மையினரைப்பற்றிக் குறிப்பாகக்கூறியது கத்தோலிக்கரிடையும், பிற சிறுபான்மையினரிடையும் புதியபிரதமர்மேல் நன்மதிப்பை உண்டாக்கியிருக்கின்றது.

## திருச்சபைஎன்றால் யாது?

சென்றவார இறுதியில் 6-வது சின்னப்ப பாப்பரசர் ஐக்கிய அமெரிக்கபடைகளைச் சேர்ந்தவர்களும், பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி தேசங்களைச் சேர்ந்தவர்களுமாகிய யாத்திரிகர் கூட்டத்தினருக்குப் பேட்டியளிக்கையில் "திருச்சபை என்றால் யாது?" என்பதற்குச் சரியானவிடையை நாம் கொடுக்கத் தயாராய் இருக்கவேண்டுமென்று எச்சரிக்கைசெய்தார், "எமது பள்ளிக்கூடப் புத்தகங்களிலுள்ள அறிவைக்கொண்டு இக்கேள்விக்கு விடை தெரிந்துவிட்டோமென்று கொள்வது தகாது. 'திருச்சபை' என்பதற்குச் சரியான வரைவு இலக்கணம் கொடுப்பது இலேசன்று. அச்சொல்லின் அர்த்தம் ஒன்று கூடுதல் என்பதே. தேவனால் அழைக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடுதல் என்பதே 'திருச்சபை' என்றசொல்லின் அர்த்தமாகும். இந்த அடிப்படைக் கருத்தை நாம் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். தேவனால் அழைக்கப்படவேண்டுவதும், அவ்வழைத்தலுக்கு நாம் செவிசாய்ப்பதும் இதில் அடங்கியிருக்கின்றன. தேவனின் அழைப்பைக் குருமாரே கொண்டுசென்று அழைக்கப்பட்டவர்களை ஒன்றுகூட்டுகின்றனர்—" இவ்வாறு கூறித் தேவனது அழைப்பின் பாக்கியத்தையும், இல்லறத்தோர் குருமாரின் ஒத்துழைப்பையும் வற்புறுத்தினர் பாப்பரசர்.

## கிரேக்கருக்குப் பாப்பரசரின் அரியகொடை

### அர்ச். பிலேந்திரரின் புனித கபாலஓடு

கிரேக்க "ஒதொடக்ஸ்" சபையினருக்கு ஓர்அரும்பெரும் புனித கொடையை 6-வது சின்னப்ப பாப்பரசர் சென்றவாரம் அளித்திருக்கின்றார். அது எதுவெனில் அர்ச். பிலேந்திரரின் (St. Andrew) புனிதகபாலஓடாம். துருக்கியரின் ஆக்கிரமிப்புக் காலங்களில் அது கிரேக்க தேசத்திலிருந்து பாதுகாப்புக்காக இத்தாலிக்குக் கொண்டுசெல்லப்பட்டு, சென்ற ஐந்து நூற்றாண்டு காலமாக மிக பூச்சியத்துடன் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. விரைவில் இப் புனிதபொருளைக் கிரேக்கதேசத் [illegible] பட்ருஸ்என்னும் இடத்துக்கு அனுப்பிவைக்கப் பரிசுத்த பாப்பரசர் ஒழுங்குசெய்திருக்கின்றார். அர்ச். பிலேந்திரர் கிரேக்க தேசத்துக்கும், ருஷியதேசத்துக்கும், ஸ்கொத்திலாந்துதேசத்துக்கும் பாதுகாவலராக விளங்குகின்றார். இவர் அர்ச். பேதுருவானவரின் சகோதரர். கிரேக்கதேசத்திலே பட்றுஸ்என்னும் இடத்தில் வேதசாட்சியாக மரணித்தார். 'ஒதொடக்ஸ்' சபையினருடன் ஒன்றிக்கும் இயக்கம் கத்தோலிக்கரிடையில் வலுப்பெறும்இந்நாட்களில் பரிசுத்த பாப்பரசர் இவ்வாறு செய்துகொண்டது ஒற்றுமை இயக்கத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த சிரத்தையை எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடிமாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞா. | பெந்தக்கோஸ்தவின் பின் 8-ம் ஞாயிறு | [ப] |
| 13 | தி. | காலதினம் | [ப] |
| 14 | செ. | அர்ச். பொனவெந்தூர் | [வெ] |
| 15 | பு. | அர்ச். என்றிக்கப்பர் | [வெ] |
| 16 | வி. | காலதினம் (உத்தரியமாதா) | [ப] |
| 17 | வெ. | காலதினம் | [ப] |
| 18 | ச. | அர்ச். கமிலப்பர் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஆடி மாதம் 11-ந் திகதி


## யேசுவின் திருநாமம்

திருச்சபைத் தலைவரான இராயப்பரும், அப்போஸ்தலரான அருளப்பரும் தேவாலயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

ஆலய வாயிலண்டை ஏழைச் சப்பாணி ஒருவன் காத்திருந்தான் தர்மம், தர்மமென இடைவிடாது கெஞ்சிக்கொண்டிருந்தான்.

அப்போஸ்தலர்கள் அவனண்டை சென்று தரித்தனர். இராயப்பர் அந்த ஏழையை உற்று நோக்கினர்.

"பொன்னும் வெள்ளியும் என்னிடமில்லை; ஆயினும், எனக்குரியதை உனக்குத் தருவேன்."

"நசரேயனுகிய யேசுவின் நாமத்தினாலே கட்டளையிடுகிறேன். எழுந்து நட" எனக் கூறினர்.

அந்தஏழையின் கையைப்பிடித்துத் தூக்கினர் இராயப்பர். அவன் கால்கள் குணமாயின. எழுந்து நடந்தான்.

பிறந்த காலம் தொடக்கம் அதுவரை நடக்க முடியாதிருந்தவன் அந்த ஏழைச் சப்பாணி.

அவனுக்கு வாழ்வுதந்தது யேசுவின் திருநாமம்.

அந்த நாமத்தின் மகத்துவம் சொல்லிலடங்காது.

அதன் இனிமையை வார்த்தையால் வர்ணிக்க இயலாது.

சிறுர்களின் உதடுகள் அத்திருநாமத்தை மகிழ்ச்சியுடன் உச்சரிக்கின்றன.

மரணத்தருவாயிலிருப்போர் அந்நாமத்தால் ஆறுதலடைகின்றனர்.

துன்ப துரிதங்களால் அந்தரிப்போர் தேற்றரவு பெறுகின்றனர்.

பாவச்சமயங்களின் பகைவன் யேசுவின் திரு நாமம்.

அகில உலகையும் ஆட்டி அலைக்கழிக்கும் சாத்தான் அஞ்சி நடுங்குவது அத்திருநாமத்துக்கே.

பக்தியுடன் யேசுவின் திருநாமத்தை உச்சரித்தல் எமது அறவழிக்கு மிக உபயோகமானது.

எமது ஆன்ம இரட்சணியத்துக்கு அது உதவும். மோட்சபாதையில் நாம் செல்லப் போதிய பாதுகாப்பும் நம்பிக்கையும் அதன் மூலம் பெறப்படும்.

கிறீஸ்துவின் நாமத்தால் நாம் செய்யும் நற்கருமங்கள் எதுவுமே நற்பயனளிக்கும் என்கிறுர் வேதபாரகரொருவர்.

அவரது நாமத்தை வருந்தியழைப்பவர்கள் அனைவருமே காப்பாற்றப்படுவர் என்பது வேதவாக்கு.

இப்போதும், எப்போதும், என்றென்றைக்கும் ஆண்டவரின் திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

அதற்கே மகிமையும் புகழும் சதாகாலமும் உண்டாகக்கடவது.

> கிறிஸ்துநாதர் வெள்ளாட்டுக்கடாக்கள், கன்றுக்குட்டிகள் முதலியவற்றின் இரத்தத்தைக் கொண்டல்ல, தமது சொந்த இரத்தத்தைக் கொண்டே நமக்கு நித்திய இரட்சணியத்தைப் பெறுவித்தார் (எபி. 9 : 12).

# பேசும் பேனு

**சிலப மேற்றிராணியாருடன் :**

அண்மையில் சிலாபமேற்றிராணியாரான வந்தனைக்குரிய எட்மண்ட் பீரிஸ் ஆண்டகையை அகஸ்மாத்தாகச் சந்திக்கநேர்ந்தது. இவர் ஒரு கத்தோலிக்க எழுத்தாளர். பாதுகாவலன் பத்திரிகையிலே பேசும்பேனு பகுதியையும், வேறு கட்டுரைகளையும் எழுதி வருகிறுர்என குரவரொருவர் ஆண்டகைக்கு என்னை அறிமுகம்செய்துவைத்தார். கத்தோலிக்க எழுத்தாளன்என்றதும் ஆண்டகை என்னில் விசேடஅக்கறை காட்டினுர். ஆசனம்தந்து ஒரு மணித்தியாலமளவில் அன்புடன் அளவளாவினுர்.

**பாதுகாவலன்பற்றி :**

சத்தியவேத பாதுகாவலனைப்பற்றி மிகுந்த அக்கறையுடன் வினவினுர். ஒரு கத்தோலிக்க பத்திரிகையைச் சிறப்பாக நடாத்துவதில் உள்ள கஷ்டங்களனைத்தையும் விபரமாக எடுத்துக் கூறினுர். கத்தோலிக்க பத்திரிகைகளைக் கத்தோலிக்கர்கள் ஆதரித்தால் மட்டும்தான் அவற்றுல் கத்தோலிக்க சமுதாயத்துக்கு நன்மையுண்டுஎன்ற உண்மையை வற்புறுத்தினுர். கத்தோலிக்க விடயங்களை மேலும்மேலும் எழுதுங்கள்; அதனுல்மிகுந்த பயனுண்டு என எனக்கு உற்சாகம் அளித்தார்.

**ஒரு பல்கலைக்கழகம் :**

ஆண்டகை அவர்களை ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்என்றே குறிப்பிடலாம். அவருடனிருந்த அந்த ஒரு மணித்தியாலத்திலும் உலக அரசியல் நிலை, இலங்கை அரசியல், இன்றைய இலங்கைப் பிரச்சனைகள், பொருளாதாரச் சீர்கேடு, திருச்சபையை நோக்கும் பிரச்சனைகள் என்றெல்லாம் ஏராளமான அம்சங்களைப் பேசித்தீர்த்து விட்டார் ஆண்டகையவர்கள். சரித்திர ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடுடையவர் இவர். இன்றைய கண்டி பௌத்த பீட உயர்அதிபர் மல்வத்தை மகாநாயகதேரோ இவரது நண்பர். இலங்கைச் சரித்திர ஆராய்ச்சியில் இருவரும் மிகுந்த ஈடுபாடுடையவர். இலங்கையின் மிகச்சிறந்த கல்விமான்களுள் ஒருவரான சிலாப மேற்றிராணியாரவர்கள் தமக்களித்த பேட்டிக்காகவும், தந்த நல்லாலோசனைகட்காகவும் பேசும் பேனு தனது நன்றித்துதிகளைப் பணிவோடு சமர்ப்பித்துக்கொள்கின்றது.

**அடிகளின் தலம் :**

அண்மையில் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து மானியங்கம என்றமலையின் உச்சிவரை சென்றேன். இரண்டாம் வாலகம்பாகுகட்டிய தேவாலயமும், சரித்திரசம்பந்தமான தலங்களும் அங்குண்டு. சீத்தாவாக்கையின் புகழ் வாய்ந்த இராசசிங்கமன்னனும் இங்கு சிலகாலம் வசித்ததுண்டு. இந்தமலையுச்சிக்கு யான்செல்வது இரண்டாவது தடவையாகும். இங்குள்ள பௌத்த உயர்பீடத்தலைவர் மகாநாயக்கதேரோ ஒருவர் சிலமாதங்களின் முன்னர் மரித்தபோது அனுதாபம்தெரிவிக்க அவ்விடத்துக்குப் பௌத்தநண்பர்களோடு சென்றிருந்தேன். எனவே, இம்முறை சென்றபோது அங்குள்ள பௌத்ததுறவிகள் எம்மை மகிழ்ச்சியோடு வரவேற்று அங்குள்ள சரித்திர சம்பந்தமான தலங்களைச் சுற்றிக்காட்டினர். இப்பகுதியில் சங்கைக்குரிய யோசேவாஸ் சுவாமியவர்கள் தங்கியிருந்த வீடொன்றும் உண்டு.

**சிவப்புநிறக் கட்டில் :**

எம்முடன் வந்தவர்களில் முதியவர் ஒருவர் யோசேவாஸ் முனிவர்வாழ்ந்த அந்த இல்லத்தைப்பற்றிய சிலசம்பவங்களை எடுத்துக்கூறினுர். அந்த இல்லத்துக்கு அண்மையில்இருந்த மற்றெரு இல்லத்தில்வசித்த வயோதிபர்ஒருவர் இச்சம்பவங்களை என்னுடன்வந்த முதியநண்பருக்குக் கூறியுள்ளார். இந்த வயோதிபர் வாஸ்சுவாமிகளின் இல்லத்தையும், அங்குள்ள பொருட்களையும் வெகுபத்திரமாகப் பாதுகாத்து வந்தாராம். இப்பொருட்களில் அடிகளார் சயனிக்க உபயோகித்த சிவப்புநிற மாக்கட்டில் விசேடம்பெற்றது. அவ்வயோதிபர் சிறிதுகாலத்துக்குமுன் மரணமடைய இப்பொருட்கள் பிறரால் களவாடப்பட்டு விட்டனவாம். அடிகள்வசித்ததாகக் கூறப்படும் இல்லமும் மிகக் கேவலமான நிலையில் இன்று காணக்கிடக்கின்றது. யோசேவாஸ் அடிகளாருக்கு அர்ச்சியசிட்ட பதவி அளிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட வேண்டுமென அவ்வில்லத்தின்முன் சிறிது பிரார்த்தித்துவிட்டு மலையிலிருந்து இறங்கினேம்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

● ரோமை நகரில்உள்ள மகாலயங்களுள் அர்ச். மாற்கு மகாலயம் மிகத் தொன்மைவாய்ந்தது. வத்திக்கானின் புதைபொருளாராய்வு இலாகா சமீபகாலமாக நடத்திய ஆராய்ச்சியின் பயனுக இவ்வாலயம் கட்டப்பட்டுள்ள அதேதலத்தில் ஆதியில் ஒரு மாளிகை நிறுவிநின்றதென்றும், அம்மாளிகையிலேயே அர்ச். இராயப்பரின் ஆலோசனையினதும், ஆதரவுடனும் அர்ச். மாற்கு தமது சுவிசேஷத்தை வரைந்தாரென்பது தெரியவந்துளது.

● ஹங்கேரியில் கியூர்எனுமிடத்தில் தேவதாயுடன் திவ்வியபாலனும் காணப்படும் ஒருபடத்தை மிகப்பூச்சியமாக வழிபடுகின்றனர். 1697-ம் ஆண்டில் இப்படத்திலுள்ள தேவதாயின் திருவிழிகள் இரத்தமும், தண்ணீரும் சொரிந்தனவாம்.

● 1917-ம் ஆண்டின் புரட்சிக்கு முன்னுல் சோவியத் ரூஷியாவில் 630 கத்தோலிக்க தேவாலயங்கள் இருந்தனவாம். இப்போது அப்பெருந் தேசத்தில் மூன்று கத்தோலிக்க ஆலயங்கள்மட்டுமே உண்டு.

## அங்கிளிக்கன்சபைத்தலைவர் பாப்பரசரிடம் செல்ல எத்தனிக்கிறுர் ?

அங்கிளிக்கன் கிறிஸ்தவசபையின் அதிதலைவர் வெஸ்மினிஸ்ரர் புரொட்டஸ்தாந்து அதிமேற்றிராணியாராவர். இன்று இப்பதவியில் இருப்பவர் டக்டர் ரும்சே அவர்கள். இப்பெரியார் அண்மையில் 6-வது சின்னப்ப பாப்பரசரைச் சந்திக்க ரோமாபுரிக்குச் செல்ல இருக்கிறுரெனச் செய்திகள் கூறுகின்றன. இவர் அங்கிளிக்கன் சபையானது கத்தோலிக்க சபையுடன் ஒன்றிக்கவேண்டுமென்ற விருப்பமுடையவர். சில வாரங்களுக்குமுன் அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில், இத்தகைய ஒன்றிப்புக்கு இருக்கும் சில முட்டுக்கட்டைகளைக் குறிப்பிட்டிருந்தார். அவை: (1) ரோமன் கத்தோலிக்க சமயத்தவர் தம்மைத்தவிரப் பிறர் திருச்சபையில் சேராதவர் எனக் கருதுதல் (2) பாப்பரசரின் வழுவாரம் எனப்படுவதைப்பற்றி எமக்கு இருக்கும் அபிப்பிராயம், (3) நாம் கத்தோலிக்க சமயத்திலிருந்து பிரிந்துபோனதன்பின்பு அச்சமயத்தவர் ஏற்றுக்கொண்ட புதிய வேதசத்தியங்கள். "இந்தமுக்கிய முட்டுக்கட்டைகள் நீக்கப்படுமாயின் நம்மிரு சபைகளும் சுலபமாக ஒன்றிக்கலாம்" என அவர் கூறியிருந்தார். இது சம்பந்தமாகவே அவர் பாப்பரசரைச் சந்திக்க இருக்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தை மகனே! போய் வரவா.....!

**பாஸ்கரும், சாந்தாவும் பாலப்பருவத்திலேயே தமக்குள் முடிச்சுப்போட்டுக் கொண்டனர். பெற்றோர்களும் அம்முடிச்சை ஆதரித்தனர். ஆனால், இறுகியமுடிச்சு யாதோ?...... அதுதான் இறைவன்போட்ட முடிச்சு!**

## மணற்கோட்டையும் மனக்கோட்டையும்

பாஸ்கரும் சாந்தாவும் கடற்கரை மணற்பரப்பில் மணற்கோட்டை கட்டி விளையாடிக்கொண்டிருந்தார்கள். மாலை இளம் வெய்யில் அந்த மழலைச் சிறாரின் பட்டுமேனிகளில் பளீரென்று வீசிக்கொண்டிருந்தது. "நீதானே அம்மா! இப்போ சமையலைத் துவக்கேன். எனக்கு ரொம்பப் பசி" என்றான் பாஸ்கர். சாந்தா வெண்கலச் சட்டிபானைகளைச் சிறிது நேரம் புரட்டினாள்; மணல் சோறானது; ஊரிகள் மச்சமாகின; பாசிகள் பசியகறியாயின; சிப்பிகள் அப்பளங்களாகின. "நீங்கள் தானே! அப்பா! சாப்பிட வரலாமே" என்றாள் சாந்தா. ஆவலோடு இலைமுன் அமர்ந்து மணற்சோற்றை அளைந்தான் பாஸ்கர். "இல்லை. முதலில் சின்ன யேசுவுக்குச் செபம்" என்று கையைத் தட்டிவிட்டாள் சாந்தா. "நீயும் உன் யேசுவும், எப்போதும் யேசுவுக்குத்தானே முதலிடம்" என்று கோபித்துக்கொண்டு எழுந்தான் பாஸ்கர். "கொல்" என்று சிரித்தனர் தூரத்தே அமர்ந்து இக்காட்சியை ரசித்துக்கொண்டிருந்த இரு ஜோடித் தம்பதிகள். அவர்களது மனக்கோட்டையில் பாஸ்கர்–சாந்தா வருங்காலத் தம்பதிகளாகக் காட்சியளித்தனர். ஆம்! உண்மையில் பாஸ்கர் சாந்தாவின் அத்தை மகன்தானே! அவள் அவனுடைய முறைப் பெண்தானே! அப்புறம் வேறு பேச்சேது! "நேரமாயிற்று! வாருங்கள் வீடு செல்வோம்" என்று அழைத்து தம்தம் செல்வங்களைக் கைகளிற் பிடித்தபடி வீடு திரும்பினர் அந்த ஜோடிப் புறாக்கள்.

## காலனின் வாயில் கன்னியின் பெற்றோர்!

நாட்கள் மாதங்களாகின. மாதங்கள் வருடங்களாகின. காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. பாஸ்கர் கட்டிளங் காளையானான். "எஞ்ஜினியரிங்" தொழிலில் அமர்ந்தான்; சாந்தா பருவமங்கையானாள். பட்டதாரிப் படிப்பை முடித்துக் கலாசாலையொன்றில் ஆசிரியையானாள். இவர்களது இரு குடும்பத்தவரும் யேசுவின் திருஇருதயத்தில் அத்தியந்த அன்புகொண்டவர்கள். ஆனி மாதத்தில் அலங்காரமாக ஒரு விழாக் கொண்டாடுவர். அத்திரு இருதயத்திற்கு நாள் முழுவதும் சற்பிரசாதநாதரின் எழுந்தேற்ற ஆராதனையும், மாலையில் சுற்றுப்பிரகாரமும் பக்தியருட்சியுடன் கொண்டாடப்பெறும். சாந்தா ரோஜா மலர்கள் தொடுத்து கோவிலை அலங்கரிப்பாள். பாஸ்கர் யாவரும் வியக்கும் அழகுப்பந்தர்களை ஆங்காங்கே அமைப்பான். இருவர் கைவண்ணத்திலும் பெற்றோரின் பணச்செலவிலும் ஊரே வியக்கும் அந்த வைபவ அழகு கண்டு; இருதயநாதரும் அவர்களது வாழ்வைப் பரிபூரணமாக ஆசீர்வதித்தார். அந்த வருடமும் அப்படித்தான் வைபவம் அமர்க்களப்பட்டது.

அடுத்தநாள் மாலை உல்லாசப் பிரயாணம் கிளம்பினர் அந்த இரு குடும்பத்தவரும். வழியில் தான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி. அது நிகழ்ச்சியா? அல்ல......பயங்கரம்! ஜோடி ஜோடியாக அவர்கள் அமர்ந்து சென்றுகொண்டிருந்தனர். மூன்று மோட்டார் வாகனங்களில். நாற்சந்தியொன்றில் முன்னே சென்றுகொண்டிருந்த மோட்டார் வாகனம் மோதியது ஒரு லொறியுடன். சுக்குநூறாகியது. நிறுத்தப்பட்டன மற்ற இருவாகனங்களும். ஓடிச் சென்று பார்த்தனர். அந்தோ! சாந்தாவின் தந்தை ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இரத்தத்தின் நடுவே சாந்தாவின் அன்னை துடித்துக்கொண்டிருந்தாள். கொண்டு சென்றனர் வைத்தியசாலைக்கு. கையை விரித்தனர் டாக்டர்கள்.

கண்களைத் திறந்தாள் அந்த மாதரசி. எதிரே தன்செல்வமகள் இருதயநாதரின் படத்தின்முன் கண்ணீருடன் கைகூப்பி நிற்கக்கண்டாள். வெளியே யன்னலினூடே நோக்கினாள். அங்கே பாஸ்கர் தோழர்களுடன் சம்பாஷித்துக்கொண்டு நிற்கக் கண்டாள். என்ன நினைத்தாளோ?... சைக்கினை காட்டி ஒரு காகிதமும் பென்சிலும் பெற்றாள். எதையோ அதில் எழுதினாள். காகித உறையில் போட்டு ஒட்டினாள். கன்னியின் கையில் கொடுத்தாள். 'சாந்தா! உன் வாழ்வை நீ திட்டமாக நிச்சயம் செய்துகொண்டவுடன் இதைத் திறந்துபார்: அதற்குமுன் திறக்காதே" என்றாள். அடுத்த வினாடியில் அன்னை கண்களை மூடினாள். கன்னி அநாதையானாள்.

## நிச்சயார்த்தம் நிரந்தரமாகவில்லை!

...... காலமென்னும் கரம் கன்னி சாந்தாவின் கண்களைத் துடைத்தது. அத்தை வீட்டில் ஒண்டவந்தாள் அபலையாக. அழகு, படிப்பு, செல்வம் இவற்றில் அவளுக்கு குறையென்பது இல்லை. என்றாலும் அநாதையென்றால் அவமதிப்பு ஏற்பட்டுவிடுவது இயல்புதானே. "அஞ்சுகமே!" என்றழைத்த அத்தை இன்று ஆதரிக்கப் பின்னின்றாள்; கோடி செல்வமுடை குமரிகளின் தந்தையர் எனக்கு, உனக்கு எனப் பாஸ்கருக்காகப் போட்டியிட்டதால் மாமன் மனம் மாறினார். ஆயின் பாஸ்கரையும் சாந்தாவையும் இணைத்து வைத்தவர்களாயிற்றே. ஆகவே, யோசித்துக்கொண்டேயிருந்தனர். ஆனிமாத திருஇருதயநாதரின்வைபவமும் அண்மிக்கொண்டேயிருந்தது. இவ்வைபவத்துக்கான ஆயத்தங்களுடன் கலாசாலை வெள்ளியூபிலி விழாவேலைகளும் தலைக்குமேல் காத்துநின்று சாந்தாவை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. "நமது திருமணத்தை இம்மாத வைபவத்துடன் வைத்துவிடுவோமே!" என்றான் பாஸ்கர். "கடமைகள் ஏராளமாக என்னை எதிர்நோக்குகிறது, சற்றுநாட்கள்செல்ல வைத்துக்கொண்டாலென்ன" என்றாள் சாந்தா. "சாந்தா! உனக்கு காதல் பெரிதா? கடமை பெரிதா? என்று சினந்தான் பாஸ்கர். பயந்தாள் சாந்தா. 'சரி பாஸ்கர்! ஆனிமாதத்திலேயே நடத்துவோம் என்று சம்மதித்தாள். அவள் மனம் உவகையால் கூத்தாடியது. பாஸ்கர் பெற்றோரிடம் தெரிவித்தான். அரைமனதுடன் சம்மதித்தனர் அவர்களும்.

சாந்தாவின் விவாகம் நிச்சயமாகிவிட்டதல்லவா? அன்னையின் கடிதம் நினைவுக்கு வந்தது அவளுக்கு. ஓடிச் சென்று பெட்டியைத் திறந்தாள் அதை எடுப்பதற்காக. "சாந்தா!" அழைத்தவன் பாஸ்கர். கையில் ஒரு தந்தி! என்னவாக இருக்குமோ? "சாந்தா! பயிற்சிக்காக வெளிநாடு செல்லும்படி அவசரத்தந்திவந்திருக்கிறது மேலதிகாரிகளிடமிருந்து. இம்மாத வைபவத்துக்குக்கூட இருக்க மாட்டேன் போலிருக்கிறது. எனினும் இந்தியாவில் ஏதாவதொரு ஆலயத்தில் இத்திருநாளை உன்னுடன்சேர்ந்து உள்ளத்தில் கொண்டாடுவேன். அடுத்த ஆனிமாதத்தில் நான்திரும்பி வருகையில் எமது திருமணத்துக்கு ஆயத்தமாக இரு என்றான் பாஸ்கர். எடுத்த கடிதத்தைப் பெட்டியுள் போட்டாள் சாந்தா. பாஸ்கர் போய்விட்டான். சாந்தா கலாசாலை யூபிலிவேலைகளில் கவனத்தைச் செலுத்தினாள்.

## மாறிச்செல்லும் மனதின்போக்கு

கடிதங்கள் வந்துகொண்டிருந்தன பாஸ்கரிடமிருந்து. செல்லுமிடச் செய்திகளெல்லாம்எழுதுவான். அவனுடன் கல்விபயிலும் ரவி, ரமா, ஷீலா, ரமேஷ் இவர்களுடைய வரலாறுகள், அவர்களோடு எடுத்துக்கொண்ட படங்கள் எல்லாவற்றையும் அவள் படித்தும், பார்த்தும் ரசிப்பாள். சாந்தாவும் பதிலெழுதுவாள். வீட்டில் நடப்பவை, பாடசாலையில் ரசிப்பவை யாவும் எழுத்துக்களில் விபரிப்பாள். ஆனால், அத்தையினது அலட்சியப் போக்கு மாமனாரின் கண்டன வார்த்தைகளோ அக்கடிதங்களில் இடம்பெறாது. ஆனிமாத வைபவத்தைப்பற்றி அப்படியே சித்திரித்து எழுதினாள். ஆண்டு ஒன்று உருண்டோடியது.

அடுத்த வைகாசிப் பௌர்ணமி. வந்துவிட்டான் பாஸ்கர். கதைகதையாக அளந்தான். ரசித்துக்கேட்டாள் சாந்தா. ஆனால், அவன் போக்கில், அன்பில் ஒருவிதமாற்றம். அன்றும் அப்படித்தான். முன்னே மணற்கோட்டை கட்டிய கடற்கரையில் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். "அப்போ! எப்போது திருமணம் சாந்தா" என்று எங்கோ பார்த்தபடி அக்கறையின்றியே கேட்டான் பாஸ்கர். தங்களுக்குத் தானே? இந்த ஆனிமாத வைபவத்துடன் அத்தையிடம் சொல்லி ஒழுங்குசெய்து வைக்கிறேனே" என்றாள் சாந்தா. "அதென்ன? அப்படிக் கூறுகிறாய்" என்று திகைத்துப்போய்க் கேட்டான் பாஸ்கர். "நீங்கள்தான் ஷீலாவை நேசிக்கிறீர்களே. அது பிழையுமல்லவே. அவள் உங்கள் இல்லற வாழ்வில் மட்டுமல்ல, உத்தியோகரீதியிலும் துணை செய்வாள்" என்றாள் சாந்தா அமைதியாக. "நான் ஷீலாவை விரும்புகிறேன் என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்" என்று வினவினான் பாஸ்கர். நீங்கள் உங்களோடு படித்த எல்லோரையும்பற்றி எவ்வித மனச்சலனமுமின்றிச் சம்பாஷித்தீர்கள், ஷீலாவைப்பற்றி யான் குறிப்பிட்டபோது இனங்தெரியாத இதயவலியுடன் அதை மறைக்கத் தெண்டித்தீர்களே" என்றாள் சாந்தா.

## இருதய அரசர் இட்ட முடிச்சா!

"சரி சாந்தா! மெய்தான். அப்போது நீ என்ன செய்வாய். நீ அநாதையல்லவா? நான் உன்னை நட்டாற்றில் கைவிடலாமா?" என்று அநுதாபத்துடன் வினவினான் பாஸ்கர். "அநாதையென்ற அநுதாபத்துக்காக என்னை நீங்கள் விவாகம் செய்வதை யான் விரும்பவில்லை. ஆயின் நான் விரும்பிய உள்ளன்பை இறைவன் எனக்களிப்பார்" என்றாள் சாந்தா. "சரி சாந்தா! நீ வேறொருவரை விரும்பத் தொடங்கியிருக்கிறாய் என்று அறிந்துகொண்ட பின்னரே யானும் மனம் மாறத் தொடங்கினேன்" என்று விளக்கினான் பாஸ்கர். "அதெப்படி யான் வேறு ஒருவரையுமே விரும்பவில்லையே இதுவரை" என்று அச்சத்துடன் வினவினாள் சாந்தா. "ஆம்! உனக்கே இன்னும் புரியாதிருக்கும் உன் உள்மனம் யாரை விரும்புகிறதென்று இதோ சென்ற ஆனிமாத வைபவத்தின்பின் நீஎனக்குவரைந்த கடிதம். நான் கோடிட்டுள்ள பகுதியைப் படித்துப்பார்" என்று அவள் எழுதிய கடிதமொன்றை நீட்டினான் பாஸ்கர்; படித்தாள் சாந்தா. "அன்புள்ள பாஸ்கர்" என்று தொடங்கியிருந்த அக்கடிதத்தில் சில வரிகள்: "சற்பிரசாதநாதரின் முன் மன்றாடிக்கொண்டிருந்தேன். உங்களைப்பற்றி நினைத்து உங்களுக்காகவே மன்றாடும் நோக்கத்துடன் சென்றேன். ஆனால், அறையுண்டயேசு என்மனதை ஆக்ரமித்துக்கொண்டார். இரத்தம்வடிந்த யேசுவின்கரங்கள் என்னை அரவணைக்கத் துடிப்பதுபோல் தோன்றியது மனக்கண்முன். "மகளே! நீயாவது எனக்குஆறுதல் கொடுக்கமாட்டாயா" என்று கேட்பதுபோலத் தோன்றியது. அந்த அழைப்பை அப்படியே ஏற்றுவிடக்கூடாதா? என் உள்ளம் கூறியது."

தனது கைகள் வரைந்த இவ்விஷயத்தைப் பூரண அறிவுடன் இப்போதுதான் புரிந்துகொண்டாள் சாந்தா. "ஆம் பாஸ்கர்; யான் வேறொருவரை உண்மையாக நேசிக்கிறேன். இப்போதுதான் அதைப்

(அடுத்த பக்கம் பார்க்க)

### மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே! வணக்கம்பல!

மன்னுயிரைப் பாவத்தினின்று இரட்சித்து, அந்த ஆத்துமங்களில் படிந்த கறையைக் கழுவுவதற்கு மாசற்ற மனுமகன் தம் இரத்தத்தைக் கடைசித்துளியளவும் சிந்தினார். யேசுவின் இதய அன்பை ஆனிமாதத்தில் நாம் தியானித்தபின், விலைமதியாத திருஇரத்தத்தின் பேறுபலன்களை நாம் அடையும்பொருட்டு ஆடிமாதத்தை நியமித்திருக்கிறாள் நம்தாயாகிய திருச்சபை. இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது யேசுவின் திருப்பாடுகளையும், அவர் தேகத்தின் திருக்காயங்களையும் தியானிப்போம். நம்பாவங்களை அத்திருஇரத்தத்தால் நிவிர்த்திசெய்து, நம் உள்ளத்தைத் தூய்மையாக்க ஆவனபுரிவோம். அடிக்கடி பாவசங்கீர்த்தனம்செய்து நம் ஆத்துமத்தில் வருஷிக்கப்படும் திருஇரத்தப் பேறுபலன்களை அபரிமிதமாக அடைவோம்.

வணக்கம்!

சோதரி ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோருக்கு ஒருவார்த்தை

எஸ். ஏ. ஐ. மெத்தியூ, எஸ். எஸ். ஜே.

(முன்தொடர்ச்சி)

பெற்றோரே! உங்கள் மகனோ அல்லது மகளோ தனக்குத் தேவ அழைத்தல் இருப்பதாக உணர்வாரேயாகில் அது தேவனிடமிருந்து வந்தது என்பதை நீங்கள் உணரவேண்டும். அதைத் தடுத்துவிட நீங்கள் முயலுவீர்களேயாகில் இறைவன் உங்கள் பிள்ளைகளுக்காக ஆயத்தப்படுத்திவைத்திருக்கும் நித்திய முடியை, உன்னத ஸ்தானத்தை அவர்கள் இழந்துவிடுவதற்கு நீங்களே காரணர்கள் ஆவீர்கள் என்பது முற்றிலும் உண்மை.

சர்வேசுரன் எதிர்பார்ப்பது நம்முடைய நல்ல இதயத்தை—தாராள குணத்தை. "என்னைப் பின்செல்" என்று கலிலேயாவில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் அவர் விடுத்த அன்பின் அழைத்தலை ஏற்றுக்கொண்டதால்தான் செம்படவர்களும் ஆயக்காரர்களுமான அந்த அப்போஸ்தலர்கள் இன்று அர்ச்சியசிஷ்டர்களாக வணங்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, சகலத்தையும்விட்டு கிறிஸ்துவைப் பின்பற்றிய அவர்கள் மோட்சத்தில் பன்னிரண்டு சிம்மாசனங்களில் வீற்றிருந்தல்லவா இஸ்ராயேலரின் பன்னிரு கோத்திரத்தையும் நடுத்தீர்க்கப்போகிறார்கள்.

நாம் அடைந்திருக்கும் அனைத்தும் ஆண்டவர் தம் இரக்கத்தின் பெருக்கத்தால் அருளியவை. எல்லோராலும் உயர்வாய் மதிக்கப்படுகிறதே நன்மக்கட்பேறு—அந்தப் பேற்றையும் அளிப்பவர் அன்பின் தேவனேயாகும். கடவுள்தான் படைத்தல் தொழிலைச் செய்கிறார். பெற்றோர் பரமனின் கருவியேயன்றோ. ஆகவே, அவருக்கே முழுதும் உரியவர்கள் அன்றோ உங்கள் செல்வங்களாகிய குழந்தைகள். பல மக்களைப் பெறும்பாக்கியம் பெற்றோர், ஒரு பிள்ளையைக் காணிக்கையாக அளிக்கலாகாதோ? அப்படி அளிக்க முன்வருவீர்களேயாகில் அன்பின் தேவன் உங்களை நித்தியத்துக்கும் ஆசீர்வதிப்பார்.

உலக மகிமைக்காக மாந்தர் உறும் கஷ்டம் அளவிறந்தது. ஏன் தங்கள் உயிரையே புகழுக்குப் பணயமாக வைப்பர். பிரான்சுதேசம் வீரர்களைப் பெற்றநாடு. நாட்டிற்காக உயிரைக் கொடுப்பதே தியாகம் என மதித்தனர் அந்நாட்டுமக்கள். அந்தப்பிரான்சுதேசத்தில் இணையற்ற வீரனாக விளங்கினன் உலகம் வியக்கும் நெப்போலியன். நெப்போலியனின் படையிலே சேர்வதற்கு இளைஞர் போட்டியிட்டனர். யுத்த அரங்கத்திலே கைவெட்டுண்டு, கால்வெட்டுண்டு குருதி ஆறாய் ஓட குற்றுயிரான நிலையில் நெப்போலியனுக்காக எஞ்சிய உயிரையும் உவந்தளிப்பதாகக் கூவினர் அந்நாட்டுவீரர். தமையனையும், தன் கணவனையும் போருக்குப் பலியிட்டுவிட்ட வீரத்தாய் ஒருத்தி, ஒருமகனே தன் குலத்துக்குள்ளான் என்பதையும், அவன் சிறுவன் என்பதையும் கருத்தில்கொள்ளாமல், "பாறுமயிர்க்குடுமி எண்ணெய் நீவி செருமுகம் நோக்கிச் செல்கென விட்டாள்" என்று தமிழிலக்கியம் கூறுகிறது. இதுபோன்ற சம்பவங்கள் எத்தனையோ உண்டு. தேசப்பற்றும் வீரப்பற்றும்கொண்ட மக்கள் தம் பிள்ளைகளை இழக்கத் தயாராய் இருந்தனரென்றால் நாம் நம் கொடைவள்ளலான இறைவனுக்கு என்னதான் செய்யலாகாது? இறைவன்பிற்கும் பிரதியன்பும் உண்டோ? மன்பதை காக்க மனிதனாய் உருவெடுத்தார் தேவன். அத்தோடு நின்றுவிடவில்லை. "ஒருவன் தன் நண்பனுக்காகச் செய்யக்கூடிய ஆகப்பெரிய தியாகம் தன் உயிரையே அர்ப்பணிப்பது" என்று கூறிய அதே இரட்சகர், தன் நண்பர்களுக்காக அல்ல, பாவத்தால் தமக்குப் பகைவர்களாகிய மானிடருக்காகக் கடினவாதைப்பட்டுக் கடைசித்துளி இரத்தமுஞ் சிந்தி நரகக் கூளியின் பிடியிலிருந்து நம்மை மீட்டார். அன்று அவர் நரகத்துக்கெதிராகத் தொடங்கிய யுத்தம் இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த யுத்தத்திற்குத் தலைமைதாங்குபவர் யேசுநாதர். அவரோடு தோளோடுதோள் இணைந்து போர்புரியத்தான் நம்மையெல்லாம் அழைக்கிறார் ஆண்டவர். நாமெல்லோரும் அமர்புரிய வேண்டியவர்கள்தான். ஆனால், படையென்றால் தளபதிகள் வேண்டாமா? அதற்காக அழைக்கப்பட்டவர்கள்தான் குருக்கள் முதலானோர். ஆகவே, நாட்டைக் காக்க வீட்டுக்கொரு ஆண்மகன் புறப்பட்டதுபோல யேசுவுக்குத் துணையாக உங்கள் அருமைந்தருள் ஒருவரை ஏன் தியாகம் செய்யக்கூடாது? யேசுவின் காடியைக்குடிக்க மனதில்லாதவன் அவரின் மகிமையிலும் பங்கடையமுடியாது.

மேலும், ஒன்றுகூறி இச்சிறு கட்டுரையை முடிப்போம். எல்லாவற்றுக்கும் எசமானான அமலன் ஒன்றைமாத்திரம் பலவந்தமாக எடுத்துக்கொள்வதில்லை. அதுதான் நம் இருதயம். "நண்பா, உன் இருதயத்தை எனக்குத் தா," என்று அவரே இரந்துகேட்கிறார். மற்றெல்லாவற்றுக்கும் அவர் நம்மைக் கேட்பதில்லை. உதாரணமாக ஒவ்வொருநாளும் பத்திரிகை வாயிலாகவும் மற்றோர் வாயிலாகவும் எவ்வளவோ மரணச் செய்திகள் கேட்கிறோம். சிந்தனைக்கு சிறிதளவு வேலைகொடுத்து இச்செய்திகளை ஆராய்ந்து பார்ப்போமானால் தேவபராமரிக்கை யாது என்பது விளங்கும்.

பதினறுவயது வாலிபன் ஒருவன் வண்டிமோதியதால் மாண்டான். மணப்பருவம் நிறைந்த மங்கையொருத்தி அரவம் தீண்டி அகால மரணம் அடைந்தாள். பி. எஸ். சி. பரீட்சை பாஸ்பண்ணிவிட்டுச் சீமையிலிருந்து வரும்பொழுது கப்பல் கவிழ்ந்ததால் காலன் வசப்பட்டான் ஒருவன். இவ்விளைஞன் அவன் பெற்றோரின் ஒரேபுதல்வன்; இப்படி அஞ்சிலும் பிஞ்சிலுமாக சாவோரைப்பற்றி நாடோறும் கேட்கிறோம். ஆனால், சிறுவர்களுக்கெல்லாம் சாவுவந்து இவர்களைப் பெற்றோரிடமிருந்து பறித்துவிட்டதே. ஆனால், எனக்கோ பிறந்தமக்கள் பத்தும் பாங்காக இருக்கிறார்களே. தேவன்நினைத்தால் ஒருவரை இருவரையல்ல பலரைப் பறித்துக்கொண்டு விடலாமே. யாது காரணத்தினால் அப்படி நிகழவில்லை—என்று யோசிப்பார் எவரும் இல்லைப்போலும். இப்படி இன்னுயிர் இழந்தவர்கள் இறைவன் சித்தப்படியே மரித்தார்கள். நாம் விரும்பினாலென்ன விரும்பாவிட்டால் என்ன பரமனின் பாசக்கயிறுக்குத் தப்பமுடியாது. பெற்றோரே! உங்களை அச்சுறுத்த இந்த ஒருசில வாக்கியங்களை எழுதியதாக எண்ணவேண்டா. உண்மையை—என்றுமே குன்றா ஒரு சத்தியத்தை — எடுத்துரைப்பதே எம் நோக்கம். உங்கள் பிள்ளைகள்மேல் சர்வ அதிகாரமுள்ள சர்வேசுரன் தான் அவர்களுக்கு 'அழைப்பு' அனுப்புகிறார் தம்மைப் பின்செல்லுமாறு. ஆம், பெற்றோரே பிள்ளைகளுக்கு உண்மையான அழைத்தல் இருக்கும்போது அதைத்தடுத்து உங்களோடு வைத்துக்கொள்ள உங்களுக்கு முடியும். ஆனால், என்றுமே வைத்துக்கொள்ள முடியுமா? சிந்தியுங்கள்...... நம் அனைவரையும் மீட்க மனிதனான கடவுளுக்கு நாம்செய்யும் கைம்மாறு தான் என்ன? அதுதான் நம் இதயம். நம்மால் மிகவும் சிநேகிக்கப்படும் பொருளை ஈசனுக்கு ஈவதில்தான் தியாகம் நிறைவெய்துகிறது. தாயையாவது தந்தையையாவது, சகோதரனையாவது சகோதரியையாவது, மனைவியையாவது, மக்களையாவது என்பொருட்டு விட்டுவிட்டு என்னைப் பின்செல்லுபவனுக்கு இம்மையில் நூறுமடங்கும் மறுமையில் நித்தியசீவியமும் அளிப்பதாகயேசுதாமேவாக்குப்பண்ணுகிறார்.

உலகம் வியக்கும் தோமாஸ் அக்குயினஸ், பெரிய அல்பிறட், அர்ச். குழந்தைதிரேசு இவர்களைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கமுடியாது, அவர்களின் பெற்றோர் அவர்களின் அழைத்தலை நிராகரித் திருப்பார்களேயாகில். இன்றும் நாம் அனுதினம் நினைவுகூரும் அர்ச். பிரான்சீஸ் சவேரியார், அந்தோனியார், இஞ்ஞாசியார் இவர்கள் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் அர்ச்சியசிஷ்டவர்கள் ஆகியிருக்க முடியாது—அவர்களை நாம் வந்திக்கவும் முடியாது—அவர்களுக்குக் கிடைத்த அழைத்தலை அவர்கள் நிராகரித்திருப்பார்களேயாகில். சிலவேளை உங்கள் சிறார் உலகம்போற்றும் உத்தமர்களாகவோ அன்றிச் சுத்தவாளர்களாகவோ ஆகவேண்டுமென்பது தேவனின் நியதியாய் இருக்கலாம். "தந்தை மகற்காற்றும் நன்றி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ்சொல்." சிந்தித்துப்பாருங்கள்.

பெற்றோரே! உங்களிற் சிலருக்கு, குருமடத்திற்கு அனுப்பவோ, சந்நியாச சகோதரனாகவோ அன்றி கன்னியாஸ்திரியாகவோவரப் பிள்ளைகள் இல்லாவிட்டால் பரவாயில்லை; கவலைப்படாதீர்கள். குருக்களாகவும் துறவிகளாகவும் வரவிரும்பும் எத்தனையோ பேர் வசதியின்றி இருக்கிறார்கள். சிறிதளவு பொருளுதவி செய்யுங்கள்; அதுவே போதும். 'தேவ அழைத்தல்' அதிகரிக்க அனுதினம் செபியுங்கள். ஏனெனில் ஆண்டவரின் தோட்டத்தில் வேலைசெய்ய வேலை ஆட்களை அனுப்புமாறு மன்றாடும்படி கற்பிக்கிறார் யேசு.

## அத்தை மகனே!...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பூரணமாக உணர்ந்துகொண்டேன். யேசுவின் அன்பில் என் காலத்தைக் கழிப்பேன்" என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறினாள்.

வீடுதிரும்பினர் இருவரும். தனது அன்னையின் கடிதத்தை இப்போது படிக்கத் துடித்தாள் சாந்தா. ஓடிச் சென்று அதை எடுத்து அதன் வரிகளில் கண்களை ஓட்டினாள்.

"கண்மணி சாந்தா! பாஸ்கர் உனக்கு ஏற்ற கணவனல்ல என்று எண்ணுகிறேன். அநாதைகளை ஆரத் தழுவும் அன்பர் யேசுமட்டும் உன் கண்ணீரைப்போக்கி வாழ்க்கைப்பாதையில் உன்னைக்கொண்டு செல்லக் கூடியவர். அவர் அழைப்பைப் புறக்கணிக்காதே" என்றிருந்தது. அக மகிழ்ந்தாள் சாந்தா.

இன்று அவள் யாருக்கும் துரோகம்செய்யவில்லை. வளர்த்த பெற்றோர் மனம்போல் பாஸ்கரை அவர்கள் கையில் விட்டுவிட்டாள். பாஸ்கர் விரும்பியவளை மணக்க வழி செய்து விட்டாள். அன்னையின் கடைசி ஆசையை நிறைவேற்றிவிட்டாள். தன் மனதின் பரிபூரண சந்தோஷத்தையும் அடைந்துவிட்டாள். இறைவனின் அழைப்பையும் ஏற்று இதோ! புறப்பட்டுவிட்டாள்.

அந்த ஆனிமாத இருதய அரசரின் திருநாளன்று "அத்தை மகனே! போய் வரவா!...... என்று பாஸ்கரிடம் விடைபெற்றுக்கொண்டே நாடினாள் இதய அரசரின் பத்தினிகள் வதியும் கன்னியர் [illegible] நோக்கி.


# அல்ஸ்ட்ரன்
# மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

ICI

அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(எக்ஸ்போர்ட்)லிமிடெட்.
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பாய் நகர் மகாநாட்டுக்குப் பதினுயிரம் மைல் யாத்திரை

லண்டன்நகரிலே பிர்சுரமாகும் பிரபல "யூனிவேர்ஸ் - கதலிக் ரைம்ஸ்" பத்திரிகைக் கோஷ்டி ஒன்று பம்பாய்நகர சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்கென யாத்திரைசெய்துவந்து, பின்னர் திரும்பும்வழியிலே பரிசுத்தநாட்டில் ஓர்சுற்றுப்பிரயாணம் நடத்திக்கொண்டு லண்டன்நகர் திரும்பவிருக்கின்றது. இந்தக்கோஷ்டியினர் கார்த்திகைமாதம் 25-ந் திகதியன்று லண்டனிலிருந்து புறப்பட்டுரோமைநகரிலும், எகிப்திய கெய்ரோநகரிலும் இரண்டு நாள்வரைதங்கிப் பலவிதமான காட்சிகளையும் பார்த்துக்கொண்டு பம்பாய்வந்துசேர்ந்து அந்நகரில் பத்துநாட்கள் தங்கியிருப்பர். இடையிலே கோவைநகர்சென்று அர்ச். பிரான்சிஸ் சவேரியாரின் கல்லறையையும்தரிசிப்பர்.

மகாநாடுமுடிந்தபின் பம்பாய் நகரிலிருந்து பரிசுத்தநாட்டுக்குச் சென்று அங்குஏழுநாள் சுற்றுப் பிரயாணம் நடத்துவர். ஜோர்தான், இஸ்ரூயேல் நாடுகளிலுள்ள திருஸ்தலங்களைத் தரிசிக்கக் குறைந்தபட்சம் ஏழுதினங்கள் தேவைப்படுகின்றன. அங்கே இவர்கள் ஜெருசலேம், ஜெரிக்கோ, வியா-குருசிஸ், மாண்டெல் பாம் கேற், சீயோன், அம்மான், நசரேத், திபேரியாமுதலியன உட்படப் பலவிடங்களையும்தரிசிப்பர்.

திரும்பும்வழியிலே அதென்ஸ் நகர்கண்டு, ஒருநாள் ரோமைநகரில்தங்கி முடியுமானல் பரிசுத்த பிதாவின்பேட்டியையும்பெற்றுக்கொள்வர். திரும்பஅவர்கள் மார்கழி 19ந்திகதியன்று லண்டன் நகர்போய்ச் சேரும்போது ஆகாயவிமானமூலம் சுமார் 10,000 மைல்தூரமான தங்கள்யாத்திரையை முடித்திருப்பார்கள்.

# பௌத்தமத நல்லெண்ணத்தூதர் பாப்பரசரைப் பேட்டிகண்டனர்

யப்பான்தேசத்திலிருந்து மேல்நாடுகளுக்குச்சென்ற பௌத்தமத நல்லெண்ணத் தூதுக்கோஷ்டி ஒன்று சென்றவாரம் வத்திக்கானில் 6-வது சின்னப்பபாப்பரசரைச் சந்தித்தது. அத்தருணம் பாப்பரசர் அவர்களோடு மிக மகிழ்ச்சியுடன் உரையாடினுர். உலகம் ஒற்றுமைப்பட வேண்டுமென்பதேதமதுபேரவாஎன்ருர். மேலும், அவர் தூதுக்கோஷ்டியினரதுநோக்கத்தைப்பாராட்டி, 23-ம் அருளப்பபாப்பரசர் உலக சமாதானத்துக்குக் காட்டிச் சென்றபாதையில் சாதி,மத,இன பேதமின்றி யாவரும் உழைக்க ஒற்றுமைப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## சூடான்தேச குருமாணவரின் அவசர குருப்பட்டம்

3 குருமாணவர் தமது படிப்புக் காலம் முடியுமுன்னமே குருப்பட்டம் பெற்றுக்கொள்ளவும் குருத்தொண்டாற்றவும் பாப்பரசர் விசேஷ அனுமதிகொடுத்து ஆபிரிக்க கண்ட சூடான் பிரதேசத்தில் திடீரென எழுந்த குருமாரில்லாக் கஷ்டத்தைத் தீர்க்க உதவியிருக்கின்ருர். தென்சூடான் தேசத்தில் வேலைசெய்துவந்த ஐரோப்பிய குருமார், சந்நியாசிகள், கன்னியாஸதிரிமார் அண்மையில் நாடுகடத்தப்பட்டது வாசகர் அறிந்தவிஷயமே. 200 குருமாரும், 100 சந்நியாசிகளும், 150 கன்னியாஸ்திரிகளுமிருந்து வேலைசெய்தபிரதேசத்தில்இன்று 30 குருமாரே தொண்டாற்றுகின்றனர். ஆபிரிக்ககண்டத்திலுள்ள ரியூனிசியா பிரதேசத்திலும் நிலைமை கஷ்டமாகவே இருக்கிறது. சுதந்தரம் அடையுமுன் கோவில்கள், மடங்கள் பள்ளிக்கூடங்கள் இருந்த இடங்கள் பலவற்றை அரசாங்கம்கைப்பற்றிக்கொண்டது. இவை இரண்டும் இஸ்லாமிய பிரதேசங்களாகையால் முன்புபோல் கிறிஸ்துவ தோற்றம் நாட்டுக்கு இருப்பதைத் தீவிர தேசிய உணர்ச்சியுள்ள அரசாங்கங்கள் விரும்பவில்லை.

## ஜேர்மனி தேசத்தில் கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமை பலம்பெறுகிறது

முற்காலங்களில் ஜேர்மனிதேசத்தில் புரொட்டஸ்தாந்து சபையினருக்கும் கத்தோலிக்க சபையினருக்கும் இடையில் பெரும் மனஸ்தாபங்கள் இருந்ததன்காரணமாக இவ்விரு இனத்தவர்களும் விரோதிகள் போல் வாழ்ந்துவந்தனர். கத்தோலிக்கர் அதிகமாகச் சீவித்துவந்த பகுதிகளில் கூடுமானவரையில் புரொட்டஸ்தாந்தர் சீவிக்கவிரும்பவில்லை. ஆனல், இக்கால சரித்திரத்தில் அண்மையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிழக்கு ஜேர்மனியிலிருந்து தலைதெறிக்க மேற்கு ஜேர்மனிக்கு ஓடிவந்த பல ஆயிரக்கணக்கானவர்கள் வசிக்க எங்கு வசதி ஏற்பட்டதோ அங்கு குடியேறினர். இதனல் பெருமளவில் கத்தோலிக்கரும் புரொட்டஸ்தாந்தரும் அளவளாவ நேரிட்டது. இங்கிலையில் இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை இயக்கமும் இதற்குப் பெருந்துணையாக இருக்கின்றது. பல இடங்களில் ஒரேமண்டபத்தில் ஒரு நேரத்தில் கத்தோலிக்க ஆராதனைகளும், மறு நேரத்தில் புரொட்டஸ்தாந்தரின் ஆராதனைகளும் நடைபெறுகின்றன.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். அந்தோனியாரின் பெரும்அனுக்கிரகத்தாலும்பரி.சதாசகாயமாதா,அர்ச். யூதாததேயு, என்போரின் மன்ருட்டாலும், புதுமை வரவணிக்கத்தின் உதவியாலும் எனது கணவர் தமக்கேற்பட்ட கடும் நோயினின்று குணமடைந்தார். நேர்த்திப்படி எனது நன்றியறிதலை இதனல் பிரசுரிக்கின்றேன். எனது கணவர் பூரண குணமடையுமாறும் இத்தால் மன்ருடுகின்றேன்.

திருமதி பேர்னடெற் பாக்கியநாதன் பஸ்கதேனியா.

● மட்டக்களப்பு

## தேவஅழைத்தல் வாரம்

மட்டக்களப்பு அர்ச். செபஸ்தியார் கோவில் பங்கைச்சேர்ந்த அநாதை இல்லத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கம் ஆகியனவற்ருேடு சென்ற ஆனிமாதம் 21-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணியளவில் தேவ அழைத்தல் வாரம் ஆரம்பமாகியது.

தினசரி பூசைப்பலியின் முடிவில் நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்து நாதரின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் சினிமாப்படம் காட்டப்பட்டது.

பலகோவில் பங்குகளைச் சேர்ந்த சுவாமிமாரினதும் பிரசங்கங்கள் கிறிஸ்தவர்களது ஆத்துமநன்மைக்காக மிக மிகப்பயனுள்ளதாக அமைந்து கேட்போரைப் பக்திப்பிரவாகத்தில் மூழ்கச்செய்தது

கடைசிநாளான 25-ந்திகதியன்று காலை 6-30மணிக்கு வண. ஜெரோம் டசோ சுவாமியவர்களால் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. காலை 9 மணிக்கு மாணவர், மாணவிகளின் பேச்சுப்போட்டியும், கன்னியாஸ்திரிமார்களினது அறிவுநிரம்பிய கருத்துரைகளும் இடம்பெற்றன.

பின்னேரம் 5மணிக்குச் சுற்றுப்பிரகாரம், தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்பின் படக்காட்சியும், பக்திப்பரவசம்நிறைந்த நாடகமும் நடைபெற்று, தேவஅழைத்தல்வாரம் இனிது நிறைவெய்தியது.

● ஹற்றன்

## வருடாந்த விழா

ஹற்றன்பங்குக் கத்தோலிக்க வாலிப இயக்கத்தின் வருடாந்தவிழா ஆனி மாதம் 21-ந்திகதி அர்ச். ஜோண்பொஸ்கோ கல்லூரி மண்டபத்தில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தோட்டங்களிலும், பிறஇடங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான சிங்கள-தமிழ் ஆண், பெண் கத்தோலிக்க வாலிபர்கள் விழாவில்கலந்து விமரிசையாகக் கொண்டாடினர். விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட திரு. வின்செண்ட் பெர்னண்டோ அவர்கள் திவ்விய பூசைப்பலியைப்பற்றி ஆங்கிலத்திலும், திரு.ஏ.பி.வி. கோமஸ், பி. ஏ. அவர்கள் "தோட்டத் தொழிலாளரும், அப்போஸ்தலிக்க சேவையும்" என்னும்பொருள்பற்றித் தமிழிலும் விளக்கமானமுறையில் விரிவான சொற்பொழிவுகள் ஆற்றினர்.

கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, விநோத உடைப்போட்டி, நாடகப் போட்டி, காபந்தாட்டப்போட்டி என்பனவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கு ஹற்றன்பங்கு உதவிக்கட்டளைக்குருவர் வண. யோசெவ்சுவாமியார் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

### திருமதி ஆன் அருளானந்தத்தின் 5-ம் வருட மரணஞாபகம்

திருமதி ஆன் அருளானந்தம் இவ்வுலகை நீத்த ஐந்துவருடங்கள் இம்மாதம் 8-ந்திகதி புதன்கிழமை பூர்த்தியாவதால் 11-ந்திகதி சனிக்கிழமை இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பரி. அடைக்கல நாயகி கோவிலில் ஒருதுக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளும், உறவினர், சிநேகிதர்களும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தயவாகக் கேட்கின்ருேம்.

துயருறும்: பெற்ருேர்.

தலவில்லு

### அர்ச். அன்னம்மாள் திருப்பதி

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 12-7-64 |
| 1-ந் திருநாள்: | 19-7-64 |
| தேவநற். பெருநாள் | 23-7-64 |
| 2-ந் திருநாள்: | 26-7-64 |

திருப்பதித் தலைவர்

### சங். அன்னை மேரி மெக்டலீன் பரமபதமடைந்த 30-ம் நாள் மரணஞாபகம்

தோற்றம்: 29-5-1892 மறைவு: 18-6-1964

"நல்ல போர்செய்தேன்; என் ஓட்டத்தை முடித்தேன்; பிரமாணிக்கமாய் விசுவாசத்தைக் காப்பாற்றினேன். இனி மேலாக நீதிப்படி எனக்கு ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் முடியைமாத்திரம் நான் பெறவேண்டியது."

எங்களது நேச அன்னையவர்கள் இறைவன் அடிசேர்ந்த 30-ம்நாள் 18-7-64-ல் பூர்த்தியாகிறபடியால், இதைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவரும் அன்னையாரின் ஆத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிருேம்.

நேச அன்னையைஇழந்து துயருறும்: கன்னியர்மடத்துப் பிள்ளைகள்

அர்ச். சூசையப்பர் கன்னியர்மடம், கம்பளை.

### 2-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு: 18-12-1889 இறப்பு: 16-7-1962

ஓ, அணைகடந்த திருப்பாடுகளே! ஓ, ஆழமான திருக்காயங்களே! ஓ, இரத்தப் பிரளயமே! ஓ, இன்பத்தையெல்லாம் கடந்தஇன்பமே! ஓ, மிகக் கொடூரமான மரணமே! ஓ, மிகவும் மதுரமான யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும்போது அனுபவித்த கொடியவேதனையையும், அளவில்லாத கஸ்தி துன்பங்களையும் பார்த்து, உமது அடியானுகிய

ஞா. இ. ஆரோக்கியசாமி

யின் ஆத்துமத்தை இரட்சித்து, உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாகக் கிருபைசெய்தருளும் சுவாமி, ஆமென்.

இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 15-7-64 புதன்கிழமை காலை 6-15மணிக்கு சந்தோமையார் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிய பத்தாவையும், அருமைத் தந்தையையும் இழந்து துயருறும்: மனைவி, மக்கள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது புதல்விக்கு நேர்ந்த பயங்கரத்துக்குரிய சத்திரசிகிச்சை யேசுமரி சூசையினதும் அர்ச். யூதாததேயு, அர்ச். றீத்தம்மாள் இவர்களினதும் இரக்கத்தாலும் வேண்டுதலாலும் சேமமாய் முடிந்ததற்குத் தோத்திரமாய் இதைப் பிரசுரிக்கிறேன்.

சூ. ம. தம்பி

* * *

### நன்றித்துதி

எனக்கு அர்ச். அந்தோனியார் செய்த பெரிய உபகாரங்களுக்காக இத்தால் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஒரு பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## பாராட்டுகின்றேம்

எஸ். பி. சற்குணன் தம்பதிகளின் புதல்வியும், 23 வயதுடையவருமான திருமதி சத்தியமலர் திருநாவுக்கரசு அவர்கள் இரண்டாம்வகுப்பிற்குரிய கௌரவத்துடனும், மருத்துவ, குழந்தைப்பிரசவ, மாதர்நோய் வைத்தியத் துறைகளில் மிகுந்த கண்ணியத்துடனும், லீட்ஸ்நகர சர்வகலாசாலையில் எம். பி., சிஎச். பி. எனும் வைத்திய சாஸ்திர பட்டங்கள்பெற்று டக்றராக அரங்கேறியிருக்கிறரென அறிந்து சந்தோஷமானேம். இவர் தந்தையார் சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

## கோட்டைவட்டாரப் பிரதிநிதி

யாழ்ப்பாண மாநகரசபையின் கோட்டைவட்டார அங்கத்தவராக இருந்து வருகின்ற திரு. ஏ. ஜி. இராசசூரியர் அவர்கள் தமதுபதவியைச் சமீபத்தில் இராசிநாமாச் செய்யலாமெனத் தெரியவருகிறது. சமீபத்தில் நடைபெற்ற புலோப்பளைக் கிராமச்சங்க தேர்தலில் அவரும் ஓர்அங்கத்தவராகத் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றூர். அதனுல் சட்டப்படி இரண்டு தலதாபன சபைகளில் ஏககாலத்தில் அவர் பதவிவகிக்க இயலாதிருக்கின்றூர். இன்னும்புலோப்பளைக் கிராமச்சங்க தலைவராகஇருந்து வரும் அவருக்குத் திரும்பவும் தலைவர் பதவி கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதனுல் மாநகரசபை அங்கத்துவபதவியைத் துறந்துவிட அவர் இப்போது ஆலோசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

## மடுப்பதியாத்திரை றெயின்வண்டி

நீர்கொழும்பிலிருந்து மடுறேட்டுக்கு வருகிற ஆவணிமாதம் 8-ந்திகதி சனிக்கிழமையும், பின்னர் மடுறேட்டிலிருந்து நீர்கொழும்புக்கு ஆவணிமாதம் 16-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையும் மருதமடுத் திருப்பதிக்கு ஒருயாத்திரை றெயின்வண்டியை ஓடவைப்பதற்கான ஒழுங்குகள் றெயில்வேப்பகுதியுடன் செய்யப்பட்டிருப்பதாக நீர்கொழும்பு, சென்மேரிஸ் வீதியைச்சேர்ந்த திரு. செபஸ்ரியன் பெர்னுண்டோ அவர்கள் தெரிவிக்கின்றூர்.

## அரசாங்கசேவையில் பெண்கள்

சகல அரசாங்கசேவைகளிலும் சேர்க்துகொள்ள இதுவரை பெண்களுக்கு இருந்துவந்த தடையை நீக்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுகாலவரை பெரும்பாலும் தட்டெழுத்தாளராகவும், சுருக்கெழுத்தாளராகவுமே அரசாங்கசேவையில் பெண்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். ஆனுல், அதிகம் விரைவிலே லிகிதர் சேவையிலும் அவர்கள் பெருமளவில் சேர்த்துக்கொள்ளப் படுவார்களென நிதிமந்திரி காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

## தமிழிலும் சிம்மாசனப் பிரசங்கம்

பாராளுமன்ற திறப்புவிழாவிலே மகாதேசாதிபதி தமது சிம்மாசனப்பிரசங்கத்தைச் சிங்களத்திலே நிகழ்த்தினூர். அதைத்தொடர்ந்து திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் அதன் தமிழ்மொழி பெயர்ப்பை வாசித்தார். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை நிரந்தரக்காரியதரிசி திரு. ஆர். எல். ஆர்னேல்டா வாசித்தார்.

## நிர்வாக அறிக்கைகள்

45 அரசாங்கபகுதிகள் இதுவரை 1962-63-ம் ஆண்டுக்குரிய தங்கள் நிர்வாக அறிக்கைகளை வெளிவிடவில்லை. இவற்றிலே துறைமுகப்பகுதியின் நிர்வாகஅறிக்கையே மிகமுக்கியமானது. ஏனெனில், அதிலுள்ள புள்ளிவிபரங்கள் புதியவரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க அதிகம் தேவைப்படுகின்றன. பாராளுமன்றத்திலே வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும்தினம் நிகழும் ஆடிமாதம் 26-ந்திகதியாகும். அதனுல் புதியவரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிக்குமுன் நிர்வாக அறிக்கைகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு நிதிமந்திரி கேட்டிருக்கின்றூர். 25அரசாங்க பகுதிகள்மட்டுமே இதுவரை தங்கள் நிர்வாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

## பாடசாலைக்கீதம்

அரசாங்க பாடசாலைகள் ஒவ்வொன்றும் தனக்கென்று சொந்தமாக ஒரு பாடசாலைக் கீதத்தைஆக்கிக் காலையிலே வகுப்புகள் ஆரம்பமாகுமுன் மாணவர்கள் அதைப் பாடச்செய்ய வேண்டுமெனக் கல்விமந்திரி சகலபாடசாலைகளுக்கும் ஓர்உத்தரவு பிறப்பித்திருக்கின்றூர். இந்த உத்தரவு வருகிறபுரட்டாசிமாதமுதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது.

## ஒருவருடச்சலுகை

விசேட வைத்தியநிபுணர்களான டக்றர்மாருக்கு இன்னும் ஒருவருடச்சலுகை அருளப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட வைத்தியசேவையைக் கைவிட்டு அரசாங்கசேவையிலே கடமையாற்றுவதா அன்றேல் அரசாங்க சேவையிலிருந்து விலகித் தனிப்பட்ட வைத்தியசேவை நடத்துவதாஎன்பதை 1965-ம் ஆண்டு ஆடிமாதம் 16-ந்திகதிக்குமுன் அவர்கள் தீர்மானிக்க வேண்டுமென்பதே அந்தச் சலுகையாகும். அப்போது முழுநேர அரசாங்க டக்றர்மாரும், முழுநேரத் தனிப்பட்ட டக்றர்மாருமே இருப்பார்கள். ஆனுல், சாதாரண டக்றர்மாரின் தனிப்பட்டசிகிச்சை வருகிற ஆவணி 1-ந்திகதியோடு முடிவுக்குவரும்.

## புதியபயிற்சிக் கலாசாலை

ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கென்றுமட்டும் 1965-ம்ஆண்டு தைமாதம் ஒருபுதிய ஆசிரியபயிற்சிக் கலாசாலை திறக்கப்படுமென்று மகரகமைப் பயிற்சிக்கல்லூரியில் நடைபெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் ஐக்கியசமாச பொதுக்கூட்டத்திலே கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றூர்.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

வாழ்க்கைச்செலவுப் புள்ளி சென்ற ஆனிமாதத்திலே 112·8ஆகும். இதற்குமுன் ஒருபோதுமே வாழ்க்கைச்செலவுப்புள்ளி இவ்வளவாக ஏறியதேயில்லை. சென்றவைகாசிமாதத்திற்கான வாழ்க்கைச்செலவுப் புள்ளி 112·7 ஆகும்.

## நால்வர் பகிஷ்கரித்தனர்

சென்ற 2-ந்திகதி வியாழக்கிழமை காலை பாராளுமன்ற கூட்டத்தொடர்த் திறப்புவிழா சனப்பிரதிநிதிகள்சபை மண்டபத்திலே நடைபெற்றபோது தமிழரசுக்கட்சி எம். பி.களும், உடுப்பிட்டி எம். பி.யும் அதிலே கலந்துகொண்டார்கள். லங்கா சமசமாஜகட்சிப் புரட்சிக் குழுவினரான திரு. எட்மண்ட் சமரக்கொடி, திரு. மெரில் பெர்னுண்டோ ஆகியோரும், ஜாதிக விமுக்தி பெரமுனை அங்கத்தவர்களான திரு. கே. எம். பி. இராஜரத்னவும், திருமதி கே. எம். பி. இராஜரத்னவும் அதனைப் பகிஷ்கரித்தார்கள்.

## நியாயமான தமிழ் உபயோகம்

இலங்கையின் ஐந்தாவது பாராளுமன்ற ஐந்தாவது கூட்டத்தொடர் சென்ற விய[illegible] அதிலே மகா[illegible] ம[illegible]னப் பிரசங்கத்தில், சிங்களமக்களும், தமிழ்மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையிலே தனிச்சிங்கள சட்டத்தையும், தமிழ்மொழியின் நியாயமான உபயோகம்பற்றிய சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவரத் தேவைப்படும் ஒழுங்குவிதிகள் இயற்றப்படுமெனத் தெரிவித்திருக்கின்றூர்.

## கட்டாய ஓய்வுக் கட்டளைகள்

அரசாங்கத்தின் கட்டாயஓய்வுக் கட்டளைகளை ஆட்சேபித்துத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் அரசாங்கசேவைக் கமிஷனுக்கு முறையிட்டதால் அவர்களின் மனுக்களை அது தனித்தனியே பரிசீலனை செய்து அக்கட்டளைகளை நிறுத்திவைக்கும்படி உத்தரவிட்டிருக்கிறது. அதனுல் அவர்களெல்லாம் தங்கள் உத்தியோகதானங்களுக்குத் திரும்பியிருக்கிறூர்கள். ஆனுல், இவர்கள் இருவருடங்களுக்கிடையில் சிங்களம்படித்து அதில் தேர்ச்சிபெறவேண்டும்என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

## அரசாங்க கட்சியில் சேர்ந்தார்

கோட்டேத்தொகுதி எம். பி. திரு. ஸ்ரான்லி திலகரத்ன கம்யூனிஸ்த கட்சியிலிருந்துவிலகி அரசாங்க பாராளுமன்றகுழுவில் சேர்ந்திருக்கிறூர். இவர் பலவருடங்களாகக் கம்யூனிஸ்தகட்சியிலே ஓர் அங்கத்தவராக இருந்தார், விரைவிலே இவர் லங்கா சமசமாச கட்சியில் சேரலாமெனக்கூறப்படுகிறது.

## பிந்திஞல் நடவடிக்கை

கந்தோர்களுக்குப் பிந்திவரும் அன்றேல் போசனத்துக்கோ, தேநீருக்கோ குறிப்பிட்டநேரத்திற்குமேலாக அதிகநேரமெடுக்கும் அரசாங்க ஊழியருக்கெதிராக எதிர்காலத்திலே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. ஊழியர் ஒவ்வொருவரும் காலை 9மணிக்குத் தனதுஆசனத்தில் இருக்கவேண்டும்; மாலை 4–30மணிவரை (போசனவேளையைத்தவிர) எந்தநேரத்திலும் அழைத்தநேரம் போகக் கூடியதாயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

## பிரயாணக் கட்டுப்பாடு

வெளிநாட்டுச் செலவாணிநிலைமை அதிகம் நெருக்கடியாய் இருப்பதாலே இந்தச் செலவாணியுடன் வெளிநாடு செல்ல அரசாங்கசேவையிலும், அரசாங்க கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் கடமையாற்றுபவர்கள் இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள். இவர்கள் பயிற்சிபெறவாயினும்சரி, மகாநாடுகளுக்காயினும்சரி வெளிநாடுசெல்ல இனிமேல் செலவாணி பெற்றுக்கொள்ள முடியாது.

## காணிவிற்க முடியாது

காணிக்கச்சேரிகள்மூலம் பராதீனஞ் செய்யப்பட்ட காணிகள் விற்கப்பட்டுள்ளனவா என்பதுபற்றிக் காணி–நீர்ப்பாசன மந்திரிகாரியாலயம் அரசாங்க அதிபர்கள்மூலம் விசாரணைசெய்துவருகிறது. காணிக்கச்சேரிகள்மூலம் காணி பெற்றவர்கள் அரசாங்கஅதிபரின் அனுமதியில்லாது அதனைவிற்கவோ அல்லது ஈடுவைக்கவோமுடியாது. அப்படி அவர்கள்செய்தால் அது செல்லுபடியாகாது.


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆடிமாதம் 11-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org